# ஈமானும் அமலும்

- இஸ்லாம் கூறுகின்ற விடயங்களை நம்புதல் **ஈமான்** எனப்படுகிறது.
- இஸ்லாத்தின் போதனைகளை செயற்படுத்துவது **அமல்** எனப்படுகிறது.
- உள்ளத்தால் ஏற்று,நாவினால் மொழிந்து,செயலால் உண்மைப்படுத்துவதே **ஈமான்** எனப்படுகிறது.
- அல்குர்ஆன் ஈமானையும் அமலையும் இணைத்து சுமார் 70 இடங்களிலும் குறிப்பிட்டுள்ளது.
- ஒரு முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலுள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும். ( புஹாரி )
- முஸ்லிம்களில் சிறந்தவர் நற்குணமுடையவரே! (அஹ்மத்)
- உரிய நேரத்திற்கு பொருத்தமான செயல்கள் **ஸாலிஹான அமல்கள்** எனப்படுகின்றது.
- முகஸ்துதியுடன் கூடிய அமல் இணைவைத்தலுக்கு ஒப்பானது.
- ஸாலிஹான அமல் எற்றுக்கொள்ளப்பட உளத்தூய்மை அவசியம்.
- ஒரு முஸ்லிமின் இலக்கு அல்லாஹ்வவை திருப்திபடுத்துவதாக அமைய வேண்டும்.
- ஒரு விதவையினதோ எழையினதோ தேவையொன்றினை நிறைவு செய்து கொடுப்பதற்காக முயற்சிப்பவர் தொடர்ந்து இரவில் நின்று வணங்கியும் பகலில் நோன்பு நோற்றும் வருபவர் போலாவார். (புஹாரி)

# ஈமானின் படித்தரங்கள்

- உள்ளத்தால் ஏற்றல்.
- நாவினால் மொழிதல்.
- செயலால் உண்மைப்படுத்துதல்.

✓ ஈமானும் அமலும் பிரிக்க முடியாதவை.அல்குர்ஆனும் ஹதீஸும் இவ்விரண்டையும் ஒன்றிணைத்தே குறிப்பிடுகின்றன.

## • அல்குர்ஆன்

❋ நபியே! எவர் ஈமான் கொண்டு நல்லமல்களும் செய்தார்களோஅவர்களுக்கு நிச்சயமாக சுவனங்கள் உண்டு.அவற்றுக்கு கீழ் நீர் அருவிகள் ஓடிக்கொண்டிருக்கும் என்று நற்செய்தி கூறுங்கள்.(2:25).

## • ஹதீஸ்

❋ ஹதீஸ்” ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது.அதில் மேலானது **லாஇலாஹா இல்லல்லாஹ்** என்ற கலிமாவாகும். மிகத்தாழ்ந்தது பாதையில் இடர் தரும்பொருட்களை அகற்றுவதாகும். வெட்கம் ஈமானின் ஒரு பகுதி ஆகும்.

## அமல்கள் யாவும் பின்வரும் நிபந்தனைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

1. அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் வழிபட்டதாக இருத்தல்.
2. அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நோக்கமாகக் கொள்ளல்.
3. அல்லாஹ்விடம் மட்டுமே கூலியை எதிர்பார்த்தல்.
4. நபி(ஸல்) அவர்களின் வழிமுறையைப் பின்பற்றியதாக இருத்தல்.